" காசிநகர்ப் புலவர் பேசும் உரைதான்
காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம் "

# தமிழ்ஒலி

ஜனவரி — மார்ச் 1982
ஒலி: 1 நாதம்: 1

தமிழ்ஒலி மன்ற
வெளியீடு.

# VICTOR & SONS
## MUSIC CENTRE

**100, STANLEY ROAD, - JAFFNA.**

சிறந்த தென்னிந்தியப் பாடகர்களின்

- பரவசமூட்டும் பக்திப் பாடல்கள்
- பழைய புதிய சினிமாப் பாடல்கள்
- பிறமொழிப் பாடல்கள்

புகழ்மிக்க நம்நாட்டு மேல்நாட்டு

- வாத்திய இசைகள்
- நாதஸ்வர மேளக் கச்சேரிகள்

ஈழத்து பொப்பிசை மன்னர்களின்

- பொப் பாடல்கள்
- நகைச்சுவைக் கதம்பங்கள்
- சினிமாக் கதைவசனம்

போன்ற

★ எல்லா ஒலிச்சித்திரங்களையும்

உங்கள் உள்ளங்களைக் கவர்ந்த

★ பழைய பாடல்களையும்

உங்கள் தெரிவின்படி

★ ஒலிப்பதிவு செய்வதற்குச் சிறந்த இடம்

நூற்றுக்கு நூறு சிறந்த முறையில்
ஸ்ரீறியோபோனிக் ஒலி அமைப்பில்
உங்கள் பாடல்களைப் பதிவு செய்வதற்கு
இன்றே விஜயம் செய்யுங்கள் !

# விக்ரர் அன் சன்ஸ்

## மியூசிக் சென்ரர்

100, ஸ்ரான்லி வீதி, ★ யாழ்ப்பாணம்.

அன்பு நெஞ்சங்களே:

# எங்கள் நோக்கம்.

வானொலி, பிரபலமான மக்கள் தொடர்புச் சாதன மாகும். இலங்கையில் முப்பது லட்சம் வானொலிப்பெட்டிகள் பயன்படுத்தப் படுவதாக இலங்கை வானொலி கூறுகின்றது. ஆம்! அந்த அளவுக்கு எம்நாட்டில் படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை மிக அதிகமாகவே வானொலியைப்பயன் படுத்துகின்றார்கள்.

இலங்கை, இந்தியா, உட்பட பத்துக்கும் அதிகமான நாடுகளிலிருந்து தமிழ் ஒலிபரப்புகள் நடைபெறுகின் றன என்பது பலருக்கு வியப்பைத் தரலாம். ''தமிழ்ப்பணி'' என்ற பெயரில் வெரிட்டாஸ் வானொலி நிலையம் பிலிப்பைன்ஸ் நாட்டிலிருந்து தினமும் தரமான தமிழ் நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது ''தமிழோசை'' என்ற பெயரில் லண்டன் பி. பி. சி. வானொலி நிலையம் வாரத்தில் நான்கு நாட்கள் தமிழ் ஒலிபரப்புச் செய்கிறது. இவ்வாறே மலேசியா, சிங்கப்பூர், சோவியத் ஒன்றியம், மக்கள் சீனக்குடியரசு, பாகிஸ்தான், சேஷல்ஸ், குவாம், வத்திக்கான் நகரம் ஆகிய நாடுகளிலிருந்தும் தமிழ் நிகழ்ச் சிகள் ஒலிபரப்பாகின்றன.

இவ்வொலிபரப்புகளை தமிழ் மக்கள் மத்தியில் அறிமு கப்படுத்துவதும், அவற்றின் மூலம் பயன் பெறச்செய்வ தும், நேயர்களை அவ்வவ்வானொலி நிலையங்களுடன் தொடர்பு கொள்ளச் செய்வதும், அவர்களின் தரமான ஆக்கங்களை வானொலியில் இடம்பெறச்செய்ய உதவு வதும், தமிழ் ஒலிபரப்புக்களில் இடம் பெறும் தரமான ஆக்கங்களை அனுமதிபெற்று பிரசுரம் செய்வதும் எமது மன்றத்தின் முக்கிய நோக்கங்களாகும். இந்த நோக்கங்களுக்கமைய தொடங்கப்பட்டுள்ள ''தமிழ் ஒலி'' சஞ்சிகையை உங்கள் கரங்களில் சமர்ப்பிக்கிறோம். இது எங்கள் கன்னி முயற்சி. எமது நோக்கங்கள் ஈடேற, எமது பணி தொடர, வாசகர்களும், வானொலி நேயர்களும் ஆதரவு தருவீர்களாக.

---



யாழ்.
மறைமாவட்ட ஆயர்
பேரருள் திரு.
வ. தியோகுப்பிள்ளை
ஆண்டகையின்
ஆசிச் செய்தி

யாழ். மாவட்டத்தின் ''தமிழ் ஒலி'' மன்றத்தின் சார்பில் வெளியிடப்படும் இக்காலாண்டு சஞ்சிகையானது பிறந்திருக்கும் புத்தாண்டில் பொங்கல் விழாவன்று தன் முதல் இதழ் விரித்து மலர்கிறது. இம் மலரானது பல் இதழ் விரித்துநல்மணம் பரப்பி வாசகர் வாழ்வினை வளம் படுத்த வேண்டுமென வாழ்த்துகிறோம்.

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்
14-1-1982

✠ வ. தியோகுப்பிள்ளை
யாழ். ஆயர்

---

சமூகத் தொடர்புச் சாதனங்களில் முக்கிய இடம் வகிப்பது வானொலி. உலகின் பல்வேறு நாடுகளிலுள்ள வானொலி நிலையங்களிலிருந்து தமிழ் நிகழ்ச்சிகள் பல ஒலி பரப்பாகின்றன. இவற்றுள் பிலிப்பைன்ஸ் நாட்டின் தலை நகரான மணிலாவிலிருந்து ஒலிபரப்பாகும் தமிழ் நிகழ்ச் சிகள் ''வெரிதாஸ்'' (Veritas) எனும் பெயருடன் ஒலி பரப்பப்படுகின்றன. இத் தமிழ்ப்பணி நிகழ்ச்சிகள் யாவும் முழு மனித வளர்ச்சிக்கு உதவுவதாய் அமைந்துள்ளன. எண்பத்தைந்து சதவீதமான கத்தோலிக்கரைக் கொண்ட நாட்டிலிருந்து ஒலிபரப்பப்பட்ட போதிலும் இந்நிகழ்ச்சி களைக் கேட்பவர்கள் எல்லாச் சமயங்களையும் சார்ந்தவர் கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கவொன்றாகும்.

இத்தகைய ஒலிபரப்புக்களை மக்களிடையே பிரபலப்ப டுத்தவும் வானொலியின் உண்மையான நல் உபயோகங்களைப் பற்றித் தெரியப்படுத்தவும், வானொலி நிலையங்களுக்கு விமர்சனக் கடிதங்கள் எழுதச் செய்வதும், அவர்களது தரமான ஆக்கங்களை வானொலியில் இடம் பெறச் செய் வதும், சமூகப்பணியில் ஈடுபட்டு மனிதனின் முழுவளர்ச் சிக்கு உதவுவதும் ஆகிய நோக்கங்களுடன் இச்சஞ்சிகை வெளியிடப்படுகிறது.

## ''தமிழ்ப்பணி'' தயாரிப்பாளர் வாழ்த்துகிறார்

வெரித்தாஸ் வானொலி நிலையம், மணிலா,
பிலிப்பைன்ஸ்

அன்பிற்கினிய 'தமிழ் ஒலி' மன்ற செயலாளருக்கு,

மன்ற அமைப்பு தொடர்பாக நீங்கள் எழுதியிருந்த கடிதத்தைப் படித்த போது 'இப்படை தோற்கின் எப் படை வெல்லும்?' என்னும் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்களின் கவிதை வரியே எனது நினைவிற்கு வந்தது. நான் எங்கு சென்றாலும், அன்பர்களிடையே பேசும்போது, யாழ்ப்பாணத்தில் நீங்கள் வெரித்தாஸ் ''தமிழ்ப்பணியை'' மக்கள் மன்றத்தில் பரவச் செய்துவரும் அருமையை விளக் கும் வாய்ப்பினைப் பெற்றேன்.

மன்றத்தின் சார்பில் நீங்கள் தொடங்க இருக்கும் 'தமிழ் ஒலி' சஞ்சிகைக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள். அந்த இதழுக்குத் திங்கள் தோறும் கட்டுரைகள் அனுப்பத் தயாராக இருக்கிறேன்.

தங்களுக்கும், அன்பு நெஞ்சங்களுக்கும் அன்பும் வணக்கமும்

அன்பின்
M. A. சுவாமி

## "ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்! ஒவ்வொரு மனிதனும் சகோதரன்"

தமிழ்ப்பணி

"ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்; ஒவ்வொரு மனிதனும் என் சகோதரன்; காரணம் அவனும் மனிதன் —என்ற பாடல் வரிகளை நாம் ஒலிபரப்பும்போது, அதைக் கேட்டு மகிழும் ஒருவர் சிந்திக்கிறார்.

"வசதி படைத்த ஒரு மனிதர் வசதி இல்லாதவரைப் பார்த்து, 'இவர் என் நண்பர்: இவர் என் சகோதரர், என்று சொல்லிக்கொள்ள முன் வருவாரா? தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒருவரைப் பார்த்து, உயர்ந்த இனத்தைச் சேர்ந்தவர் 'நீ என் சகோதரன்' என்று கூறுவாரா? ஏதோ பாடுகிறார்கள்; நாமும் கேட்கிறோம்; அவ்வளவுதான். பணம் படைத்தவர், தன்னைப்போல் பணம் படைத்தவரை மட்டுமே மதிக்கிறார்; அவரோடு நட்புக் கொள்ளுகிறார்; உறவு கொள்ளுகிறார். தன்னுடைய நிலைமைக்கும் கீழே இருப்பவருடன் நட்பு கொள்வதோ, உறவு கொள்வதோ நடைமுறையில் இல்லையே!" என்றெல்லாம் உள்ளம் குமுறுகிறார் அந்தச் சிந்தனையாளர்· அவருடைய உள்ளக்குமுறல் தவறானது என்று யாரும் கூறமுடியுமா?

மக்களிடையே பொருளாதார இடைவெளி நீங்கினால் ஒழிய—பிறப்பினால் உயர்வு தாழ்வு ஒழிந்தால் ஒழிய "ஒவ்வொரு மனிதனும் என் நண்பன்; ஒவ்வொரு மனிதனும் என் சகோதரன்"—என்று கூறுவது பொருளற்றதாக ஆகிவிடும். பொருளாதார ஏற்றத் தாழ்வு, சாதி வேறுபாடு நீங்குவதற்குச் சரியான வழி என்ன?

தன்னிடம் உள்ள நல்லவற்றை, மற்றவர்களுக்கும் பகிர்ந்து அளிக்க ஒவ்வொருவரும் முன்வருதல் வேண்டும்.

"உன்னிடம் இரண்டு ஆடைகள் இருந்தால், அவற்றில் ஒன்றை, ஆடை இல்லாத ஏழைக்குப் பகிர்ந்து கொடு"—என்கிறார் இறைமகன் இயேசுக்கிறீஸ்து. பகிர்ந்து கொடுப்பது என்பது பிச்சை கொடுப்பதல்ல. அப்படியானால், பகிர்ந்து கொடுப்பது என்பதன் பொருள் என்ன? ஏழைகளையும், தாழ்ந்தவர்களையும், நம்முடைய உடன் பிறப்புக்களாக—நமக்குச் சமமானவர்களாக மதித்து, அவர்களுடைய துன்பத்திலிருந்து அவர்களை விடுவிக்க முழுமையாக உதவ வேண்டும்.

வறுமையில் வாடும் ஒருவருக்கு ஒருவேளை உணவு கொடுத்து விட்டால்—அல்லது சில நாணயங்களைக் கொடுத்து விட்டால் பிரச்சினை நீங்கிவிடாது. வறுமையில் வாடும் நம் அயலார், அவருடைய முயற்சியிலேயே, அவருடைய வாழ்விற்குத் தேவையானவற்றைச் சம்பாதித்துக் கொள்வதற்கு, அவருக்கு, நாம், வழியும் துணையுமாய் இருக்கவேண்டும். நமக்கும் கீழான நிலையில் இருப்பவர்களை மேல் நிலைக்கு உயர்த்த வேண்டியது நம்முடைய கடமை. இந்தக்கடமையில் நாம் வெற்றிபெறத் தனிப்பட்ட முறையிலும், பலரின் ஒத்துழைப்பை ஒருங்கு திரட்டிக்கூட்டாகவும் செயற்படுதல் வேண்டும். நாம் ஒவ்வொருவரும், நமக்குக் கீழான நிலையில் இருப்பவர்களை, கல்வியிலும், வாழ்க்கை நிலையிலும், உயர்த்துவதற்குத் திட்டமிட்டுப் பணியாற்றினால் பொருளாதார ஏற்றத்தாழ்வு—சாதி வேறுபாடு நீங்குவது உறுதி. நம்மை விட மேலான நிலையில் இருப்பவர்களை நோக்கி, அவர் அளவுக்கு நான் எப்போது செல்வத்தில் உயருவேன் என்று ஏங்குவதை விடுத்து, நம்மை விடக் கீழான நிலையில் இருப்பவரை மேல் நிலைக்கு உயர்த்துவோம்.


## சக்தி நூல் நிலையம்

உங்களுக்கு தேவையான

- சகலவிதமான புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள்
- சஞ்சிகைகள், நாவல்கள், சினிமா பத்திரிகைகள்
- வாழ்த்து—அட்டைகள், கலண்டர், டயறிகள்
- பரிசுப்பொருட்கள்

எம்மிடம் கிடைக்கும்

53, திருகோணமலை வீதி, — மட்டக்களப்பு.

போன்: 065–2103

## TV PALACE

TELEFUNKEN ✲ PHILLIPS ✲ SONY ✲ SANYO
GENERAL ✲ GRUNDIG ✲ JVC ✲ NATIONAL

அனைத்திற்கும் கிழக்கு மாகாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்

## அஜந்தா ஸ்டோர்ஸ்

T' Phone: 065—2491

23, திருமலை வீதி, மட்டக்களப்பு.

# மன்னிப்பின் மகத்துவம்

—அமிர்தா மகிந்தா—

## வெரித்தாஸ் தமிழ்ப்பணி கட்டுரைப்போட்டியில் முதற் பரிசு பெற்ற கட்டுரை

பல்லுக்தப்பல், கண்ணுக்குக்கண் என்று பலிக்குப்பலி எடுக்கத்துடித்துக் கொண்டிருக்கும் இந்த காலக்கட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் எமக்கு இயேசுக்கிறீஸ்து கைக்கொண்ட பொறுமையும், மன்னிக்கும் மனப்பான்மையும் மிக்க ஆச்சரியத்தைக் கொடுக்கக்கூடும். வாழ்க்கையில் தமக்கு ஏற்பட்ட எதிர்ப்புகள், அவமானங்கள், வாதைகள், பாடுகள் என்பவற்றை மிகப்பொறுமையுடன் தமக்குள் தாமே தாங்கிக் கொண்டதோடு, தன்னை மரணத்தின் எல்லைக்கே இழுத்துச்சென்ற பாவிகளின் பாவமன்னிப்புக்காக வேண்டி நிற்கக்கூடிய மனப்பக்குவம் இயேசு கிறீஸ்துவினால் மட்டுமே முடிந்த அருஞ்செயலாகும்.

இயேசுவின் வாழ்க்கையை ஆராய்ந்தால் அது பிறர் அன்பிலும், மன்னிப்பிலும் வேரூன்றி இருந்ததைக் காணலாம். சமுதாயத்தால் 'பாவிகள்' என ஒதுக்கப்பட்டோருடன் இயேசு நட்புக் கொண்டார். கல்லெறிந்து கொல்லப்பட இருந்த ஒரு விலைமாதை மன்னித்து, அவள் புதுவாழ்வுகாண வழிவகுத்தார். தனது சீடர்களில் ஒருவனாகிய யூதாஸ் காரியோத்து தன்னைக் காட்டிக் கொடுக்கப் போகிறான் என்பதை அவர் அறிந்திருந்த போதிலும், கடைசி இராப்போசனத்தின் போது தனது சீடர்களின் கால்களைத் தாமே கழுவித்துடைத்தவர், யூதாஸின் கால்களையும் கழுவித்துடைத்து, தன் அன்பையும் மன்னிக்கும் திறனையும் வெளிப்படுத்தினார்.

இயேசுவைச் சங்கிலியால் கட்டியிழுத்துச் சென்று வாரினால் அடித்தனர். முள்முடி அணிவித்தனர். அவரின் முகத்தில் காறி உமிழ்ந்தனர். 'ராஜாவே வாழ்க' என ஏளனம் செய்தனர். பாரமான சிலுவையை நெடுந்தூரம் சுமக்க வைத்தனர். தாகத்திற்குத் தண்ணீர் கேட்டால் கசப்பான காடியைக் கொடுத்தனர். இத்தனை வேதனைகளும் போதாதென்று அவரைக் கொடும் சிலுவையில் அறைந்தனர் கொடும்பாவிகள்.

ஐந்து அப்பங்களையும், இரண்டு மீன்களையும் திரளான ஜனங்களுக்கு வயிறு நிறையும்படி கொடுத்தவர், குருடருக்குப் பார்வை அளித்தவர், செவிடர்களைக் கேட்க வைத்தவர், ஊமைகளைப் பேச வைத்தவர், சப்பாணிகளை நடக்க வைத்தவர், வியாதியஸ்தர்களைக் குணமாக்கியவர், மரித்தோரை உயிர் பெறச்செய்தவர் இயேசு. இத்தனை அற்புதங்களை செய்யக் கூடிய வல்லமை நிறைந்தவர் நினைத்திருந்தால் இக்கொடிய சிலுவை மரணத்திலிருந்து தப்பியிருக்கலாம். அல்லது தன்னை சிலுவையில் அறைந்தவர்களை சபித்திருக்கலாம். ஏன், உலகத்தையே அழித்திருக்கலாம். இயேசு அப்படிச் செய்யாத காரணம் தனது வானகத் தந்தையின் சித்தப்படியே அனைத்தும் நடக்க வேண்டுமென்பதை கீழ்ப்படிவுடன் ஏற்றுக்கொண்டதேயாகும்.

இயேசு மண்ணுலக வாழ்வில் கடைப்பிடித்த மன்னிப்பின் மகத்துவத்தைத் தன் இறுதி மூச்சுவரை கடைப்பிடித்தார். உயிர் பிரியும் போதும் பகைவரின் மீட்புக்காகவே வேண்டினார்.

"தந்தையே! இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்
இவர்களை மன்னியும்"

இயேசு கூறிய இவ்வார்த்தைகள் எத்தனை ஆழமானவை. எத்தனை உயரிய கருத்தைக் கொண்டவை என்பதைச் சிந்திப்போமாக. மற்றவர்களின் சிறு தவறுகளைக் கூட மன்னித்து மறந்து விட முடியாத நமக்கு, இவ்வார்த்தைகள் நல்லதொருபாடமாக, முன்மாதிரியாக அமையவேண்டும். நாம் நமது அயலாரின் குற்றங்களை மன்னித்தாலே எமது குற்றங்களை ஆண்டவர் மன்னிப்பார் என நாம் எதிர்பார்க்கலாம். சாதாரண மனிதராக வீதிகளில் போதனைகளையும் அற்புதங்களையும் நிகழ்த்திக்கொண்டிருந்த இயேசு, தனது இறுதி மன்னிப்பின் மூலம் "தெய்வம்" என்ற மேம்பட்ட நிலையை அடைய முடிந்தது.

அன்று இயேசுவால் மன்னிக்கப்பட்ட பாவிகளின் வாரிசுகளாக இன்று பலர் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். பண்பற்ற செயல்களால் தினமும் இயேசுவைச் சிலுவையில் அறைந்த வண்ணம் இருக்கின்றனர். இந்த நிலை நீங்க வேண்டும். இயேசுவினால் அருங் கொடையாகக் கிடைக்கப்பெற்ற மன்னிப்பின் மகத்துவத்தை உணர்ந்து, நமது அயலாரை அன்பு செய்து அவர்களின் குற்றங்களை மன்னித்து, மறந்து வாழ முயற்சி செய்வோமாக.

*With Best Compliments from*

**SILVA WATCH WORKS**

**10, NEW CENTRAL MARKET**

**Hospital Road, Jaffna.**

*Phone: 7862*

# விந்தை மிகு உலகம்

யாழ்ப்பாணம் S. உமாகாந்தன்

பொழுது புலர்கின்றது, புள்ளினங்கள் ஆரவாரிக்கின்றன. மலர்கள் மலர்ந்து நறுமணம் பரப்புகின்றன. மெல்லென தண்ணொளி படர்கின்றது. உலகம் துயில் விட்டு எழுகிறது. ஆம்! மீண்டும் ஒரு நாள், ஒளிமிகு நன்னாள் ஆரம்பமாகின்றது. தங்கத் தட்டென எழுந்து வரும் சூரியன் நம் மனதில் எத்தனை நம்பிக்கையையும் எதிர்பார்ப்புக்களையும் ஏற்படுத்துகிறான்! சூரியனின் ஒளிக்கதிர்கள் இருளை அகற்றுவதோடு இரவுப்பனி விட்டுச்சென்ற குளிரையும் போக்கி விடுகின்றன.

உயிர் வாழ்வுக்கு அடிப்படையான சூரியனைப்பற்றி 17ம் நூற்றாண்டின் பின்னரே பயனுள்ள தகவல்கள் சேகரிக்கப்பட்டன. 1610ம் ஆண்டு ஜனவரி 7ம் நாள் இத்தாலிய அறிவியல் அறிஞர் கலிலியோ (Galileo) ஒரு தொலைநோக்கிக் கருவியை உருவாக்கி அதன் மூலம் சூரியனையும் ஏனைய கோள்களையும் ஆராய்ந்தார். அன்றிலிருந்து விண்ணகம் பற்றிய மனிதனின் தேர்ச்சி விரிவடைந்து கொண்டே செல்கிறது.

சூரியன் ஒரு ''நெருப்புக் கோளம்'' அல்ல. அதன் உட்புறம் எம்மால் கற்பனை கூடச் செய்ய முடியாத அளவு வெப்பமுடையது. பூமியிலிருந்து 9 கோடி 30 லட்சம் மைல்களுக்கு அப்பாலுள்ள சூரியனின் சுற்றளவு 27 லட்சம் மைல்கள். அதன் கொள்ளளவு (Volume) பூமியைப்போல் பத்து லட்சம் மடங்கு அதிகமானது. சூரியனைச் சுற்றி (Photosphere) எனப்படும் 200 மைல் தடிப்பான ஒரு மண்டலம் உள்ளது. இம்மண்டலமே சூரியக் கதிர்களை வடித்தனுப்புகிறது. இதன் புறப்பகுதி வெப்பம் 5000°c என மதிப்பிட்டுள்ளனர். சூரியனின் உட்புறவெப்பம் 20 மில்லியன் டிகிரியாக இருக்கலாம். சூரியன் தன்னைத்தானே சுற்ற சராசரி 28 நாட்கள் செல்லும். இன்னமும் வாயு நிலையிலேயே இருப்பதால் நடுப்பகுதி 25½ நாட்களிலும் துருவப் பகுதிகள் 34 நாட்களிலும் சுற்றிவருகின்றன.

பல கோடி ஆண்டுகளுக்கு முன் சூரியனுக்கு அண்மையாக வேறொரு விண்மீன் சென்றிருக்க வேண்டுமென்றும், அதன் காரணமாக் சூரியனிலிருந்து ஒரு பகுதி அவ்விண்மீனின் இழுப்புச் சக்தியினால் பிரித்தெடுக்கப்பட்டு பல்வேறு கோள்களாக அண்டவெளியில் மிதக்கின்றன என்றும் சில அறிவியல் அறிஞர்கள் கூறியுள்ளனர். அந்த கோள்களே புதன், வெள்ளி, பூமி, செவ்வாய், வியாழன், சனி, யூரேனஸ், நெப்டியூன், புளூட்டோ என்பவையாகும். இவற்றுள் பூமியில் மட்டுமே வளர்ச்சியடைந்த உயிரினங்கள் வாழ்கின்றன. பூமியைப்பற்றி ஆய்ந்தறியப்பட்ட தகவல்கள் பலவுண்டு. ஆனால் சில தக்வல்கள் அறிவியல் அறிஞர்களின் ஊகங்களாகவே உள்ளன. இந்த ஊகங்கள், சிந்தனைக்கு விருந்தாகவும் படிப்பதற்குச் சுவையாகவும் அமைந்துள்ளன. ஐசாக் நியூட்டன் (Isaac Newton) என்பவர் பூமிக்கு ஈர்ப்புச்சக்தி இருப்பதை கண்டு பிடித்தார் இந்த ஈர்ப்புச்சக்தியால் பூமி பல விண்கற்களை கவர்ந்து இழுக்கின்றது. தினமும் 9 கோடி விண்கற்களை பூமி கவர்ந்திழுப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. விண்கற்களில் சில, வெப்பத்தைக் கொடுக்கக்கூடிய கதிர் வீச்சுத் தன்மை உடையவை. இதனால் பூமியின் பருமனும், வெப்பமும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

சராசரி 20 மைல் தடிப்பான பூமியின் மேலோட்டுப் பகுதி, பல அடுக்குகளைக் கொண்டது. இந்த அடுக்குகளை ஆராய்வதன் மூலம் பூமியின் உயிரின வரலாற்றை ஊகிக்க முடியும்.

பல உயரமான மலைகள் கடலுக்கடியில் அமிழ்ந்துள்ளன. ஹவாய் மலை கடல் மட்டத்துக்குமேல் 3 மைல்களும் மட்டத்துக்குக் கீழே 3 மைலுமாக மொத்தம் 6 மைல் உயரமானது. அநேகமாக மலைகள் ரயில் வண்டிபோல் தொடராகவே காணப்படும். சில தொடர்கள் பல்லாயிரம் மைல் நீளமானவை. மலைகள் எவ்வாறு தோன்றின? உங்கள் வலதுகை சுட்டுவிரலால் இடதுகை வெளிப்புற மணிக்கட்டை அழுத்தி விரல்களை நோக்கி நகர்த்துங்கள். அப்போது தோல் சுருங்குவதுபோலவே பூமியின் மேலோடு சுருங்கியதால் மலைகள் தோன்றின என்பது ஊகம். அவ்வாறு சுருங்க வைத்த சக்தி எது என்பது விந்தையாகவே உள்ளது.

சில மலைகள் எரிமலைகள் வெடித்து வெளியே வீசப்பட்ட பாறைகளால் உருவானவை. மெக்ஸிகோவில் விவசாயம் செய்யப்பட்டுவந்த ஒரு வயலில் திடீரென எரிமலை தோன்றியது. ஒரு நாளில் 25 அடி உயரமாக உயர்ந்த மேடு ஒரு வாரத்தில் 500 அடியாகவும் 20 வாரங்களில் 1100 அடி உயரமான குன்றாகவும் அந்த இடத்தில் வளர்ந்துவிட்டது.

எரிமலைகள் தோன்றக் காரணம் என்ன? காரணம் எதுவானாலும் அவை அணுகுண்டையும் விடப் பயங்கரமானவை என்பதே நாமறிந்த உண்மையாகும். 1883ம் ஆண்டு பசிபிக் பெருங்கடலில் Krakatoa என்ற இடத்தில் வெடித்த ஒரு எரிமலை அங்கிருந்த மலை ஒன்றைத் தூக்கி எறிந்துவிட்டது. அப்போது எழுந்த ஒலி 1300 மைல்களுக்கு அப்பாலும் கேட்டதாம். எரிமலை வெடித்த இடத்தில் அரை மைல் ஆழமுள்ள ஒரு துவாரம் ஏற்பட்டது. இந்த இடம் பின்னர் ஒரு துறைமுகமாகியது. பெருநட்டங்களை ஏற்படுத்திய எரிமலைகள் ஏராளம். எரிமலைகள் ஏன் வெடிக்கின்றன? வருங்காலத்திலும் இவ்வாறு நடக்குமா? விடை அறியா வினாக்கள் இவை.

எரிமலைகள் அண்ணன் என்றால் நிலநடுக்கங்கள் தம்பி எனலாம். நிலநடுக்கங்களை அளவிடும் கருவி Seismograph எனப்படும். இக்கருவிகள் தெரிவிக்கும் தகவல்களிலிருந்து, தினமும் பலநூறு நிலநடுக்கங்கள் நிகழ்வதாகத்தெரிகிறது.

பூமி தன் பாரத்தைச் சமன் செய்து கொள்வதால் நில நடுக்கங்கள் ஏற்படுவதாக அறிவியல் அறிஞர்கள் கருதுகின்றனர். சுகமாக உறங்குவதற்காக நாம் படுக்கையில் அப்படியும், இப்படியும் புரள்வது போல!

சில நிலநடுக்கங்கள் நகரங்களையே அழித்து விட்ட செய்திகளைக் கேட்டிருக்கிறோம். 1950ம் ஆண்டு வட இந்தியாவில் ஏற்பட்ட 'அஸ்ஸாம் நிலநடுக்கம்' நில அமைப்பையே மாற்றிவிட்டது மட்டுமன்றி, 'எவரெஸ்ட்' சிகரத்தை மேலும் 100 அடிகளால் உயர்த்தியும் விட்டது. 6 விநாடிகளே நீடித்த இந் நிலநடுக்கத்தின் காரணம் புரியாத புதிராகவே உள்ளது.

பூமியின் துருவப்பகுதிகள் பனிக்கட்டிகளால் மூடப்பட்டுள்ளன. தென்துருவ கண்டத்தில் சில இடங்கள் 8000 அடி உயரம் வரை பனியால் மூடப்பட்டு உறைந்து கிடக்கின்றன. வடதுருவத்துக்கு அண்மையில் உள்ள ரஷ்யாவின் வட பகுதி பனியால் மூடப்பட்ட Tundra எனப்படும்

(5ந் பக்கம் பார்க்க)

பிரதேசமாகும். இங்கே நிலம் பல நூறு அடி ஆழத்திற்கு உறைந்துள்ளது. சில நாட்களே வரும் கோடைகாலத்தில் 3, 4 அடி ஆழத்திற்கு சற்று நெகிழ்ச்சி ஏற்படும்போது சேறும் சகதியுமாகக் காட்சியளிக்கும். காடுகளோ புல் வெளிகளோ இல்லாத இப்பிரதேசத்தில் சில பற்றைகளும் புற்களும் லட்சக்கணக்கான நுளம்புகளும் உண்டு. ஆனல் இப்பிரதேசத்தில் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பல லட்சம் உயிரினங்கள் வாழ்ந்ததாக நம்பப்படுகிறது.

அகழ்வாராய்ச்சியின் போது பல மிருகங்களின் உடல்கள் கண்டு பிடிக்கப்பட்டன. உறைபனி இந்த உடல்களை 10,000 ஆண்டுகள் வரை பாதுகாத்துள்ளது. கண்டெடுக்கப்பட்ட மிருக இனங்களில் மம்மூத் (Mammoth) என்பது யானையைப்போன்ற, ஆனல் இன்னும் பெரிய உருவமுள்ளது ஒரு மம்மூதின் வாய்க்குள் புற்கள் காணப்பட்டன. எனவே அம்மிருகம் சடுதியாகவே இறந்திருக்க வேண்டும்.

Baron Toll என்ற ஆராய்ச்சியாளர் இப்பகுதியில் 90 அடி உயரமான ஒரு பழ மரத்தை, சாய்ந்திருந்த நிலையில் அகழ்ந்தெடுத்தார். பச்சை இலைகளுடனும் முற்றிய பழங்களுடனும் இம்மரம் காணப்பட்டது.

6 மாதங்கள் சூரிய ஒளியே படாத இப்பிரதேசத்தில் இவ்வளவு பெரிய உயிரினங்கள் எவ்வாறு வாழ்ந்தன என்பது விந்தையேயாகும். காலநிலை திடீரென மாறியதா? மிருகங்கள் திடீரென உறைபனிக்குள் அகப்பட்டது எங்ஙனம்?

குளிர் பிரதேசத்தில் நிலக்கரி காணப்படுவது மற்றொரு விந்தை. Captain Nares என்ற ஆய்வாளர் வடகிறீன்லாந்தில் 20 அடி கனமுள்ள ஒரு நிலக்கரித்தொடரைக் கண்டு பிடித்தார். வடதுருவத்துக்கண்மையில் நோர்வேக்குச் சொந்தமான ஸ்பிட்ஸ்பேகன் (Spitsbergen) என்ற தீவிலும் நிலக்கரி கண்டு பிடிக்கப்பட்டது. தென் துருவ கண்டத்தில் கூட பனி குறைவான இடங்களில் நடத்திய ஆய்வுகள் நிலக்கரி இருப்பதை உறுதி செய்தன நிலக்கரி உண்டாவதற்குப் பெரும் காடுகளும் மிகுதியான சூரிய வெப்பமும் தேவை. எனவே இப்பகுதிகளில் இவையிரண்டும் தாராளமாக இருந்திருக்கவேண்டும். அப்படியெனில் பூமியின் சுழற்சிப்பாதை மாறியதா? அவ்வாறு மாறக் காரணமான சக்தி எது? யாராலும் அறுதியிட்டுக்கூறமுடியாத இவற்றைப்பற்றி சில அறிஞர்கள் தமது ஊகங்களைத் தெரிவித்துள்ளனர்.

Alfred Wegener என்ற ஜேர்மானியர் கருத்துத் தெரிவிக்கையில், பூமியின் நிலப்பரப்புகள் தொடக்கத்தில் ஒன்றுகவே இருந்ததாகவும், நாளடைவில் வெடிப்புக்கள் ஏற்பட்டு கண்டங்களாகப் பிரிந்தன என்றும் கூறினர். தமது கூற்றுக்கு ஆதாரமாக, ஐரோப்பா, ஆபிரிக்கா என்பவற்றின் மேற்குக்கரையையும், வடதென் அமெரிக்க கிழக்குக் கரையையும் பொருத்தினல் ஒன்றுசேரும் எனக் காட்டினர். அவரது கூற்றுச் சரியெனக் கொள்ளப்பட்டால் பல சந்தேகங்கள் தீர்ந்து போகும். வெப்பவலயப்பகுதிகள் பிரிந்து போய் குளிர் வலயத்தை அடைந்திருக்கலாம்.

ஆனல் அவரது கூற்றில் தவறுகள் உள்ளன. முதலாவதாக, கண்டங்கள் பிரிந்ததற்குக் காரணமெதுவும் தெரிவிக்கப்படவில்லை. அடுத்ததாக, கண்டங்கள் பிரிந்து செல்வதானல் கடலினடியிலுள்ள பாறைகள் வழுக்கும் தன்மை கொண்டவையாக இருக்கவேண்டும். உண்மையில் கடலினடியில்தான் Basalt எனப்படும் மிகக் கடினமான பாறை இருக்கிறது. அடுத்ததாக, மேற்கு ஐரோப்பிய கரையிலும் கிழக்கு அமெரிக்கக் கரையிலும் உள்ள பாறைகள் ஒத்துவரவில்லை.

1900-ம் ஆண்டில் இவரின் நண்பரான Damian-Kreichgauer என்பவர் கண்டங்கள் பிரிந்து செல்லவில்லையென்றும் பூமியின் மேலோட்டுப் பகுதி முழுவதும் நகர்ந்து கொண்டிருப்பதாகவும் கூறினர். இக்கூற்றைச் சரியென எடுப்பதானல் மேலோட்டுக்குக் கீழேயுள்ள பாறைகள் வழுக்கும் தன்மையுடையனவா? என ஆராயப்படவேண்டும். அவ்வாறு நகர்வதன் காரணம் தெரியவேண்டும். பூமியில் துளை போட்டுப் பார்த்தாலே இவற்றிற்கு விளக்கம் கிடைக்கும். அறிவியல் வளர்ச்சியின் முதிர்ச்சி இவ்விந்தைகளுக்கு விடைகாணுமா?

அலுமினியம், பித்தளை, செம்பு, எவர்சில்வர் பாத்திரங்களுக்கும் எலெக்ரோ

பிளேட்டிங் செய்வதற்கும், இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்களுக்கும்

# பிள்ளையார் மெற்றல் வேக்ஸ்

251 (107), கே. கே. எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7019

# குழந்தைகளும் குடற்பூச்சிகளும்

Dr. S. நரேந்திரன், மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்.

குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களில் அதிக அளவில் பரவியிருப்பது குடல் பூச்சி நோய் ஆகும். சுகாதாரம் அற்ற சூழ்நிலை, சுத்தமற்ற வாழ்க்கைமுறை ஆகியவை காரணமாகக் குழந்தைகளைக் குடற்பூச்சி வகைகள் பற்றிக் கொண்டு வருத்துகின்றன. எத்தனை சத்துள்ள உணவு சாப்பிட்டாலும், அது உடலோடு சேராமல் வீணாகிறது. குழந்தைகள் நாளுக்குநாள் மெலிந்து, நலிந்து, வெளுத்து அழகற்றுப் போகின்றன. நாம்பெற்ற செல்வம் நமக்கே வெறுப்பாகக் காட்சியளிக்கிறது. ஏன் இப்படி?

சுத்தக்குறைவு காரணமாகப் பூச்சிகள் குடலுக்குள் சென்று, உடலுக்குச் சேரக்கூடிய சத்தையும், இரத்தத்தையும் உறிஞ்சிவிடுவதால் இத்தகைய நிலைமை. குடல் பூச்சிகள் குழந்தைகளை அணுகாமல் நாம் எடுக்கவேண்டிய தடுப்பு முறைகள் யாவை?

குடல் பூச்சிகளில் பலவகை உண்டு அவை கொக்கிப் பூச்சி, நாடாப்பூச்சி, சாட்டைப்பூச்சி, நாக்குப்பூச்சி, கீரிப் பூச்சி என்பன.

நாக்குப்பூச்சி (Round Worm): மண்புழுவைப் போல் நீளமாக இருக்கும். இவற்றின் முட்டைகள் உணவு, தண்ணீர், காற்று ஆகியவை மூலமும், குழந்தைகள் விரல் சூப்பும் காரணமாகவும் குடலுக்குட் செல்கின்றன. அங்கு புழுக்களாக மாறி சுமார் 6-12 அங்குலம் வரை வளருகின்றன. திறந்த வெளியில் மலங்கழிப்பதன் காரணமாகவும் இப்புழுக்களின் முட்டைகள் குழந்தைகளின் குடலுக்குள் செல்கின்றன. இதன் காரணமாகக் குழந்தைகளுக்கு வயிற்றுவலி, பசியின்மை, எடைக்குறைவு, இருமல், சளி ஆகியவை ஏற்படும். சில நேரங்களில் வாந்தி, பேதி உண்டாகலாம். குழந்தை மண் தின்னும். உடம்பு இளைத்து, வயிறு பெரிதாகிவிடும். புழுக்கள் அதிகமானல், குடல் அடைப்பு ஏற்பட்டு, மலங்கழிக்க இயலாமற் போகலாம். இப்பூச்சிகள் சில சமயங்களில் குழந்தையின் வாய் வழியாகவோ, மூக்கு வழியாகவோ வந்து, பெற்றோரை அச்சப்படுத்தும். சுத்தமான கழிவறைகளில் மலங்கழிப்பது, சாப்பிடும்முன் கைகளைச் சுத்தம் செய்வது, நகங்களை வெட்டிக்கொள்வது ஆகியவை இதற்குப் பொதுவான தடுப்பு முறைகளாகும்.

கீரிப்பூச்சி (Thread Worm): அரை அங்குல நீளமுள்ள இப்பூச்சி வெண்மையானது. இப்பூச்சி இரவில் குடலை விட்டு ஆசனவாய் வழியாக வெளியேறும். அங்குள்ள தோலின் இடுக்குகளில் ஆயிரக்கணக்கில் முட்டைகள் இடும். இப்பூச்சி முட்டை இடுவதற்காகத் தோலைக் குடைவதால் நமைச்சலும், குறுகுறுப்பும் ஏற்படும். இந்த நமைச்சலுக்காகச் சொறிவதால் நக இடுக்குகளில் இந்த முட்டைகள் ஒட்டிக்கொண்டு மீண்டும் குடலுக்குள் சென்று விடுகின்றன.

இதற்குத் தடுப்பு முறையாகக் குழந்தைகளின் நகங்களை வெட்டிவிட வேண்டும். சாப்பிடும் முன்பு, கைகளை 'சோப்' இட்டு சுத்தமாகக் கழுவுதல் வேண்டும். இப்பூச்சியால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் உடைகள், படுக்கை விரிப்புகள், பாய்கள் முதலியவற்றைக் கொதி நீரால் அடிக்கடி சுத்தப்படுத்த வேண்டும். வீட்டில் ஒரு குழந்தைக்கு இந்நோய் இருந்தால், மற்றவர்கட்கும் எளிதில் தொற்றிவிடும். வயிற்றில் கீரிப்பூச்சியுடைய குழந்தைகளுக்கு வயிற்றுவலி, ஆசனவாய் நமைச்சல் ஆகியன தோன்றும்.

கொக்கிப் பூச்சி (Hook Worm): கொக்கிபோன்ற உருவமுடைய இவற்றிற்குப் பற்கள் உண்டு. பற்களின் உதவியால், குடல் சுவர்களைப் பற்றிக்கொண்டு, இது இரத்தத்தை உறிஞ்சும். இதன் காரணமாக வயிற்றுவலி, வயிறு வீங்குதல், வயிற்றுப்போக்கு, இரத்தச்சோகை ஆகியவை ஏற்படுகின்றன. இப் பூச்சி, கால்களிலுள்ள இடுக்குகள் வழியாக இரத்தக் குழாயை அடைந்து, பின்னர் குடலுக்குள் செல்லுகிறது. விவசாய மக்களிடையே இப்பூச்சி அதிகளவில் காணப்படுகிறது. கழிவறைகளில் மலங்கழிப்பதும், செருப்பு அணிவதும் தடுக்கும் வழிகளாகும்.

நாடாப் பூச்சிகள் (Tape Worm): இப்பூச்சியால் பீடிக்கப்பட்ட மாடு, பன்றி ஆகியவற்றின் இறைச்சியை நன்ருக வேகவைக்காது உண்பதால், இது குடலை அடைகிறது. மலத்துடன் துண்டுதுண்டாக வெளிவரும்.

பன்றிகளால் ஏற்படும் நாடாப் பூச்சியின் குஞ்சுகள் மூளை, தசைகள் ஆகியவற்றைத் தாக்கும். மூளையில் கட்டியை ஏற்படுத்தி, வலிப்பை உண்டாக்கும். ஆனல் மாட்டிறைச்சியினல் உண்டாகும் நாடாப்பூச்சி இப்படி வலிப்பு முதலியவற்றை ஏற்படுத்துவதில்லை. நாடாப்பூச்சியைத் தடுக்க இறைச்சியை நன்ருக வேகவைத்து உண்பது அவசியமாகும்.

நாடாப் பூச்சிகளில் இன்னெருவகை நாய்களோடு ஒட்டிப் பழகுவதால் வருகின்றன. நாய்களுடன் பழகுவோருக்கு இந்த முட்டைகள் வாயின் வழியாகக் குடலை அடைகின்றன. அங்கிருந்து இரத்தக் குழாய்கள் மூலம், கல்லீரலுக்குச் சென்று, அங்கு, பெரும் கட்டியை உண்டுபண்ணுகின்றன. சில சமயங்களில் இந்நாடாப் பூச்சிகள் மண்ணீரல், மூத்திரக்குழாய், மூளை, நுரையீரல், எலும்பு போன்ற இடங்களில் கட்டியை ஏற்படுத்தும். தடுப்பு முறையாக, நாயுடன் ஒட்டிப் பழகாமையும், அவை சாப்பிடும் தட்டுக்களை வேறுபடுத்தி வைப்பதுமாகும். நாய்க்கும் மருந்து கொடுத்து நாடாப்புழுவை அகற்றவேண்டும். நாடாப்புழுவை நீக்கக் குழந்தைகளுக்கு மருத்துவம் அறுவைச்சிகிச்சை ஒன்றேயாகும்.

சாட்டைப் பூச்சி: இப்பூச்சியின் முட்டைகள் உணவு, தண்ணீர் ஆகியவை மூலம் குடலுக்குள் சென்று அங்கு புழுக்களாக மாறி சுமார் ஒன்றரை அங்குல நீளம்வரை வளருகின்றன. வயிற்றில் இப்புழுக்கள் தங்கி, இடுகின்ற முட்டைகள் மலத்தோடு வெளியேறுகின்றன. அசுத்தமான நீர், வேகவைக்காத காய்கறிகள், மலத்தை உரமாகப் போட்டு வளர்க்கப்படும், தாவரங்களின் காய் கனிகள் ஆகியவற்றின் மூலம் குடலுக்குள் செல்கின்றன. இதனல் வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு, குடல்வால் அடைப்பு, குதம் தள்ளுதல் போன்ற நோய்கள் உண்டாகின்றன.

வெப்ப நாடுகளில் ஒரு குழந்தையின் மலத்தில் நாக்குப் பூச்சி, கீரிப்பூச்சி, கொக்கிப் பூச்சி, சாட்டைப் பூச்சி ஆகியவை ஒரே சமயத்தில் பொதுவாகக் காணப்படலாம். வாந்தி, பசியின்மை, உடல் அரிப்பு, பேதி, காய்ச்சல், மூச்சு இழுப்பு, இரத்தச்சோகை ஆகியவை இவற்றின் அறிகுறிகள்.

இந்த நோய்களைத் தடுக்கச் சுகாதாரமுடன் வாழப் பழகுங்கள். இந்தக் கட்டுரையில் கூறியிருக்கும் நோய்த் தடுப்பு முறைகளைக் கையாளுங்கள்.

## வாழ்த்துகிறேன் வாழி

பொதிகைதனில் பிறந்த பொன்னான தமிழதனை
போற்றியே அனுதினம் பாடி
வதியும் மக்களின் வாழ்க்கை சிறப்புறவே
வளமான வழிகள் பலகூறி
பதியாய்த்தினம் வாழும் பண் பான தமிழ்ப்பணியே
பணிவுடனே நானுனைப் பாடித்
துதிக்கின்றேன் உனையிங்கு துலங்கிடு நீயென்றும்
தூய்மையின் சின்னமாய் ஆகி.

காலையும் மாலையும் கணீரென ஒலித்தெம்மை
கருணை வழி அழைத்துச் செல்வாய்
சோலையில்மலரைப்போல்சொக்கிடும்மணங்கொண்டு
சுகமென்றும் காணவைப்பாய்
நாளையெனும் வாழ்க்கை நலமுடையதாக நற்
கூற்றுக்கள் பலவு முரைப்பாய்
ஏழை பணக்காரனெனும் பேதங்களின்றி
எல்லோர்க்கு மின்பமளிப்பாய்.

"உண்மை ஓங்குக" என்றே நாளும்
உலகெங்கும் முழக்கமிட்டு
நன்மை பயத்திடும் ஆக்கங்கள் பலவற்றை
நாளும் எமக்கனுப்பியே வைத்து
ஐந்து ஆண்டுகள் அரும்பணி புரிந்தின்று
ஆறும் வயதில் அடியெடுத்திடும் உன்
பந்தமும் பாசமும் பலத்தோடு விளங்கிட
பாரினில் வாழ்த்துகிறேன், வாழி!

— செல்வி மல்லிகா இரங்கசாமி
டெமெரியா எஸ்டேட்,
பசறை.

## Dxing—ஓர் எளிய பொழுதுபோக்கு

—பேராசிரியர் தி. இளம்பூரணன் தஞ்சாவூர்—

வானொலியைச் செய்திக்காகவோ, பாடல்களுக்காகவோ நாடகத்திற்காகவோ, அல்லது பிடித்த ஒரு நிகழ்ச்சிககாகவோ கேட்கவிரும்புகிறோம். ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சிக்காக, ஒரு குறிப்பிட்ட வானொலி நிலையத்தை, நமது வானொலிப்பெட்டியில் தேடும்போது, எத்தனையோ வகைவகையான ஒலிகளை நாம்கேட்க நேரிடுகிறது. இவை எல்லாம் என்ன ஒலிகள் என்ற வினாவும், இவற்றை ஒலி பரப்புகிறவர்கள் யார் என்ற சிந்தனையும், அதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வமுங் கொண்டவர்கள் "வானொலி கேட்பதைப் பொழுது போக்காகக் கொண்டவர்களில்" சற்று வேறுபட்டவர்கள்.

நமக்கு முன்பின் தெரியாதுள்ள ஒன்றை "X" என்று குறிப்பிடுவது வழக்கம். இதன்படி தொலைவிலிருந்து வரும் முன்பின் தெரியாத ஒலியை "Distant—X" அல்லது "DX" எனக் குறிப்பிடுகின்றனர். வானொலியில் நாம் கேட்கும் ஒலிபரப்புக்களைக் கேட்டு, அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளுவதே "Dx-ing—டி எக்ஸிங்" என்ற பொழுது போக்காகும். இப்படித் தங்களின் ஓய்வு நேரத்தைச் செலவிடுபவர் "Dxer—டி எக்ஸ்ஸர்" என அழைக்கப்படுவார். இந்தப் பொழுதுபோக்குக்கு, ஒரு நல்ல வானொலியும், மிகுந்த பொறுமையும் மெத்தவும் தேவைப்படுகின்றன.

வானொலி கேட்பதில் Dxerக்கும், மற்றவர்களுக்கும் வேறுபாடு என்ன? ஒரு Dxer, தான் கேட்கும் நிகழ்ச்சிகளைக், கேட்ட அளவோடு நிறுத்திக் கொள்வது இல்லை. தான் கேட்ட நிகழ்ச்சி வானொலியில் எந்தத் தரத்தில் (Quality of Reception) கேட்கப்பட்டது என்பதையும், ஒலி பரப்பாகிய நாள், நேரம், அலைவேகம் (Frequency) ஒலி பரப்பாகிய நிகழ்ச்சி பற்றிய குறிப்பு ஆகியவற்றையும் குறித்துக் கொள்ளுகிறார். இக்குறிப்பே "பெறுதல் குறிப்பு" அதாவது Reception Report என்று அழைக்கப்படுகிறது. வழக்கமாகக் கேட்கும் ஒலிபரப்புக்களைத் தவிர, புதிய புதிய ஒலிபரப்புக்களை — புதிய புதிய நிலையங்களை — வானொலி வழியே கண்டு பிடிப்பது, ஒருவரைத் தகுதி வாய்ந்த Dxer ஆக்கும்.

—தொடரும்


# V. T R. Singams

Dealers in: *ELECTRICAL ACCESSORIES,*
*LAMP SHADES, CABLES,*
*DURO PIPES, FITTINGS Etc.*



**7, Stanley Road, Jaffna.**

*Phone: 8045*

# Why Thirukuralism

**Dr. PATRICK ANTHONY PILLAI**
Secretary
Divine Thirukural Society — Kandarmadam JAFFNA.

**THIRUKURAL** has slowly but surely emerged as an altruistic compendium of maxims universally acceptable to all people irrespective of clime, colour or creed.

The study of "Thiruvalluvar's Thoughts" has had an added impetus by Dr. Albert Schiveitzer's statement on the thirukural of thiruvalluvar, which has attracted the attention of the world to the philosophy of **"World-Affirmation"**

The kural extols the spirit of internationalism. The concept of "Universal Brotherhood" has been explained in it by its author, the divine sage Thiruvalluvar, who had lived an exemplary life himself.

Thirukuralism is a way of life. It is like all religions put together. Thirukural edifies three supreme aims of life, viz; virtue, wealth and happiness, in 133 chapters; each consisting of maxims in couplet form it embraces the valuable tenets and thoughts of the world and ethics of love. the Kural imparts,

1. The Light of Righteous Living
2. The Wealth of Practical Wisdom.
3. The Milk of Heart's Abundance
4. The Honey of Conjugal bliss
5. The Joy of Peace And Harmony at Home and wider homeland

There are 80 translations of Thirukural in 26 languages. The Thirukural has been immortalised for all times by being chosen as the book to be placed next to the HOLY BIBLE at the British museum library.

---

**நடந்தவைகளை நினைத்துக் கவலைப்படாதீர்கள். சிந்திய பால் பயன்படுவதில்லை**
**சிரித்து வாழப்பழகுங்கள். சீரான வாழ்வுக்கு அதுவே நல்வழியாகும்.**

75வது திருமண ஆண்டு விழாவைக் கொண்டாடிய ஒரு அமெரிக்க தம்பதியரைப் பத்திரிகை நிருபரொருவர் அணுகி அவர்கள் இவ்வளவு காலம் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் இரகசியம் என்னவென்று கேட்டார். கணவனின் தலை அசைவைப் புரிந்துகொண்ட மூதாட்டி கூறியது.

'அதில் அப்படி இரகசியம் ஒன்றுமில்லை. எமது திருமணம் முடிந்ததும் என்னைத் தன் குதிரை வண்டியில் ஊருக்கு இவர் அழைத்துச்சென்றார். வழியில் குதிரைக்குக் கால் தடுக்கியது. இவர் "ஒன்று" எனக்கூறிவிட்டு குதிரையைத் தட்டியெழுப்பிவிட்டார். சிறிது தூரம் சென்று மீண்டும் கால் தடுக்கியது. "இரண்டு" மூன்றாவது தடவை தடுக்கியதும் இவர் அக்குதிரையைச் சுட்டுக்கொன்றுவிட்டார், திகைத்த நான், "ஏன் இவ்வாறு செய்தீர்கள்?" எனக் கேட்டேன். இவர் என்பக்கம் திரும்பி "ஒன்று" என்றார். அவ்வளவுதான்'

✲ ✲ ✲

மனைவிக்குப் பயந்த ஒரு கணவன், மனைவியின் கொடுமைகளைப் பொறுமையோடு சகித்துக் கொண்டிருந்த அவனுக்கும் ஒருநாள் விடிவு ஏற்பட்டது. மனைவி இறந்து விட்டாள். மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்கள் பிரேதப்பெட்டியைத் தூக்கி வரும்போது ஒரு முனை வாசற் கதவில் அடிபட்டு விட்டது. அந்த அதிர்ச்சியிலோ என்னவோ அவன் மனைவிக்கு உயிர் மீண்டுவிட்டது. அயலவர் ஆனந்தப்பட்டனர் அவனும் அதுபோலக் காட்டிக்கொண்டான். சில காலம் சென்றதும் மனைவி மீண்டும் இறந்து விட்டாள். உறவினர்கள் பிரேதப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு வெளியே வரும்போது வாசற்கதவருகில் நின்ற அவன் சொன்னான் "மெள்ள கவனமாகப் பார்த்து வாருங்கள்."

✲ ✲ ✲

விரலைச் சூப்பும் மகனைத் தாயின் கண்டிப்பு திருத்தவில்லை. பொறுப்பேற்ற தந்தை மகனைப் பார்த்து 'நீ பெரியவனா?' சிறியவனா? எனத் தந்திரமாகக் கேட்டார். சடாரென்று விரலை எடுத்துவிட்டு மகன் "நான் பெரியவன் தான்" என்றதும் பெற்றோர் மகிழ்ந்தனர்.

சில நாட்களின் பின்னர் ஒருநாள் மகன் சிகரெட் புகைப்பதை தந்தை கையும் களவுமாகப் பிடித்தார். அப்போது மகன் கேட்டான்,

"அப்பா, நான் பெரியவன்தானே!"

வெரித்தாஸ் "தமிழ்ப்பணி" ஒலிபரப்பைத்தினமும் கேளுங்கள்
காலை 7-00 — 7-30 — 16, 19 மீட்டர்கள் சிற்றலை (SW)
இரவு 7-30 — 8-00 — 19, 23, 31 ,, ,, (SW)

# மன்னிப்பு

— நாகேசு. தர்மலிங்கம் —

இன்று அந்த முற்றவெளி விழாக்கோலம் பூண்டிருக்கிறது. மின் விளக்குகளின் பளிச்சென்ற வெளிச்சம். மாவிலை, குருத்தோலைத் தோரணங்கள்; இடைக்கிடை பட்டுக்கடதாசிச் சோடனைக்ள், ஒலிபெருக்கியில் சினிமாச் சோககீதங்கள், இப்படி பல. அந்த ஊரின் நாலுபக்கத்திலும் இருந்து மக்கள் எறும்புக் கூட்டம்போல் அந்த முற்ற வெளியை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். அங்கு கூட்டம் ஒன்று நடைபெறப் போகிறது. அதுவும் ஒரு அஞ்சலிக்கூட்டம். ஈழத்தின் பிரபல எழுத்தாளரும் சமூகத் தொண்டருமான பரமானந்தம் மாஸ்டரின் மறைவை ஒட்டி அப் பகுதி மக்கள் அந்த அஞ்சலிக்கூட்டத்தை நடத்துகிறார்கள். முற்றவெளியின் நடுப்பகுதியில் மேடை ஒன்று அமைக்கப்பட்டு பரமானந்தம் மாஸ்டரின் திரு உருவப் படத்துக்கு மாலை ஒன்றும் போட்டுவைத்து அதன் முன்பாக இரண்டு குத்துவிளக்குகளும் ஏற்றப்பட்டிருக்கின்றன. கூட்ட அமைப்பாளர் பேரின்பநாதன் அங்குமிங்குமாக ஓடித்திரிந்து கூட்டத்தைத் தொடங்குவதற்கான ஆயத்தங்களைச் செய்கிறார்.

வித்துவான் சண்முகம் தலைமையில் அஞ்சலிக்கூட்டம் ஆரம்பமாகிறது. மாரிகாலத்தில் நீர் நிரம்பி நீச்சல் தடாகம் போல் காட்சியளிக்கும் அந்த முற்றவெளி, இப்போ கோடைகாலமாதலால் இடைக்கிடை காற்றின் வேகத்தால் மண்ணை அள்ளிக் கொட்டிக்கொண்டு இருந்தது. தலைவரின் தலைமை உரையைத்தொடர்ந்து சிவகுருநாதன், மலர் வேந்தன், காசிலிங்கம் என்று உள்ளூர் வெளியூர் எழுத்தாளர்கள், பிரமுகர்கள் பலர் அந்த மறைந்த எழுத்தாளனின் எழுத்துப் பணிகளையும் சமூகத் தொண்டையும் வியந்து கூறி விளாசிக்கொண்டிருந்தார்கள். எழுத்தாளர் சிவானந்தன் அந்த மறைந்த எழுத்தாளனைப் பற்றி மற்றவர்களுக்கு கண்ணீர் வரும் விதத்தில் பேசினார். தனக்கே உரிய பாணியில் கனத்ததொனியில் பேசிய சிவானந்தன்...

"ஒரு எழுத்தாளன் எதை எதை எழுத்தில் வடித்தானோ அதன் படி இம்மியளவும் பிசகாது வாழ்ந்து காட்டினான்"

என்று பரமானந்தம் மாஸ்டரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறினார். பரமானந்தம் மாஸ்டரின் மாணவர்களாகிய எங்களுக்கு இது புதியது இல்லை எனினும் பல புதியவர்களுக்கு அவை முக்கியமான தகவல்கள்தான். அந்த முற்ற வெளிக்கு அருகில் அமைந்திருக்கும் தாழ்த்தப் பட்டவர்களின் குடிசைகளைச் சுட்டிக்காட்டி........

"பரமானந்தம் மாஸ்டர் இந்த ஒடுக்கப்பட்ட மக்களின் முன்னேற்றத்துக்காகவும் மேம்பாட்டுக்காகவும் பாடுபட்டுழைத்தார்" என்று அவரின் தீண்டாமை ஒழிப்புப்போராட்டத்தைப் பற்றி கூறிக்கொண்டிருந்தார். இதைச் செவிமடுத்த மக்களுக்கு அந்த முற்றவெளியில் சிவானந்தன் உருவில் பரமானந்தம் மாஸ்டர் நிற்பது போன்ற உணர்வே ஏற்பட்டது. சிவானந்தன் அமர்ந்தவுடன் கூட்டத்தில் உள்ளவர்களின் கரகோஷம் வானைப் பிளந்தது. தலைவர் எழுந்து.........

"அடுத்ததாக திரு. புண்ணியமூர்த்தி அவர்கள் பேசுவார்கள்".

என்று கூறி அமர்ந்தார். எங்கோ ஒரு மூலையில் நின்ற புண்ணியமூர்த்தி மேடைக்கு வந்து ஒலிவாங்கியின் முன் நின்று செருமத்தொடங்கவே என் இதயம் அதிகம் அடிக்கத்தொடங்கி ஆத்திர உணர்வு மேலிட்டது. மற்றைய பேச்சாளர்களைப்போல் அவரும் சோகக்குரலில்,

"சமூகத்தொண்டன் பரமானந்தம் மாஸ்டரின் இழப்பு ஈடு செய்ய முடியாத ஒன்றாகும்"

என்று பேசத்தொடங்கினார். அவரது பேச்சு, மேடை நளினம் என்பனவெல்லாம் என்மனத்தில் மேலும் மேலும் எரிச்சலையும் ஆத்திரத்தையும் ஏறபடுத்தியது.

இந்த மறைந்த எழுத்தாளனின் மரணத்துக்கு காரணமாக இருந்தவர்களில் இந்தப் புண்ணியமூர்த்தியும் ஒருவர். பரமானந்தம் மாஸ்டரின் "தாழ்த்தப்பட்ட மக்களின் குடி தண்ணீர்ப் பிரச்சனைச் சத்தியாக்கிரகப் போராட்டம்" என் நினைவில் வந்தது.

'சாதிப்பாகுபாடு குல அடிப்படையில் இல்லை. குண அடிப்படையிலேயே எழுகிறது, என்று எழுதிய அந்த எழுத்தாளன் அந்தக் கிராமத்தில் உள்ள நன்னீர்க்கிணற்றில் தாழ்த்தப்பட்டவர்களும் சமமாக தண்ணீர் அள்ள வேண்டும் என்று சத்தியாக்கிரகப்போராட்டம் நடத்தினான். அந்தக் கிராமத்துப் பழையதுகள் எதிர்த்து எழத் தொடங்கினார்கள். இதற்குத் தலைமை தாங்கியவர் திரு. புண்ணிய மூர்த்தி - எழுதுவினைஞர் அவர்கள். புண்ணியமூர்த்தியின் ஏற்பாட்டின்படி ஏவலாளர்களால் பரமானந்தம் ஆசிரியர் கடுமையாகத்தாக்கப்பட்டு நோய்வாய்ப்பட்டு மரணமானார் ஆறுமாதங்ளுக்கு முந்திய இந்நிகழ்ச்சியை மறந்து எப்படித்தான் இந்த மனிதர் இந்த மேடைப்பக்கம் வந்தாரோ தெரியவில்லை.

'என்ன ஏமாற்றுவித்தை? ஒன்றையும் அறியாத மக்கள் பலர் அவரின் நீலிக் கண்ணீர் வடிப்பை கவலையுடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே. ஒரு விசில் அடிப்போமா, என்று எண்ணியபோது பக்கத்தில் உள்ளவர்களின் ஞாபகம் வந்தது. எனினும் உண்மை தெரிந்தவர்கள் இரண்டொருபேர் அந்தக் கூட்டத்தில் இருக்கிறார்கள் என்பதைக் காட்ட இடைக்கிடை இரண்டொரு விசில் சத்தமும் கேட்டது.

கூட்டம் முடிந்து மேடையருகில் கீழே இறங்கி அத்தனை வெளியூர் உள்ளூர் பிரமுகர்களிடம் கை குலுக்கி புண்ணியமூர்த்தி வெளிப்படும் போது என் உடலில் ஈட்டி பாய்வது போல் உணர்ந்தேன்.

நேரே சைக்கிளை வீட்டுக்குத்திருப்பி அன்றைய இரவு உணவைக் கூட சாப்பிடாமல் அப்படியே கட்டிலில் சாய்ந்தேன். அந்தப் புண்ணியமூர்த்தியின் நினைவிலிருந்து விடுபடாத எனக்கு என் மனைவி மணியின்

" சாப்பிடவாருங்களேன் " என்ற குழைவான சொல்லும் அதிக எரிச்சலையே ஏற்படுத்தியது.

"எனக்குச்சாப்பாடு வேணும் மணி; நீர் சாப்பிட்டு விட்டு நித்திரை கொள்ளும் "

என் நினைவலைகள் ஆத்திரத்துடன் புண்ணியமூர்த்தியில் நிலை குத்தி நின்றது.

பழைய டையறிக்குள் இருக்கும் பரமானந்தம் மாஸ்டர் எனக்கு எழுதிய கடிதத்தின் ஞாபகம் வரவே அதை எடுத்துப் பிரிக்கிறேன்.

"தம்பி யார் என்ன துன்பம் செய்தாலும் அவருக்கு அதை திருப்பி செய்ய நினைக்காதே..........."

அவர் கைப்பட எழுதிய அவ்வரிகள் மனச்சுமையை மெள்ள, மெள்ள, இறக்கியது.

விளையும் பயிரை முளையிலே தெரியும்:1

## சகாயராணி

அந்தச் சிறுமி தன் மாமாவுடன் ஒவ்வொரு மாலையும் உலாவச் செல்லும்போது, ஒருவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டு போவதைக் காண்பாள். அவனுக்குத் துணையாக ஒரு நாயும் கூடவே செல்லும். ஒரு நாள் நாயைக் காணவில்லை. சிறுமி காரணம் கேட்ட போது அவன் ''தங்கையே, பொல்லாத சில சிறுவர்கள் கல்லால் அடித்துவிட்டனர். நாய் காலில் ஊனம் அடைந்து வீட்டில் படுத்திருக்கிறது'' எனச் சொன்னான். இரக்கமுள்ள சிறுமி அவனதுt வீட்டிற்குச் சென்றாள். நாயின் ஊனமுற்ற காலைத் தடவிக்கொடுத்தாள். வெந்நீர் எடுப்பித்து ஒத்தடம் கொடுத்தாள். வலி குறைந்ததினால் நாய் முனகுவதை நிறுத்தி, நன்றியுடன் வாலை ஆட்டியது சிறுமியும் மகிழ்ச்சி அடைந்தாள். பிற்காலத்தில் பெரும் புகழீட்டிய நைட்டிங்கேல்' தான் அச்சிறுமி.


# தி மலாயன் ரேடிங் கம்பனி

இரும்பு, பித்தளை, பலவர்ண மைவகைகளுக்கும்

128, 130 கே. கே. எஸ். வீதி.

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 547

**Anything and Everything in**

★ *RADIOS,* ★ *TELEVISIONS,* ★ *ELECTRONIC GOODS AND SPARE PARTS*

*Pay Visit To:*

# Eswar Corporation

**(Direct Importers)**

**18, Stanley Road, Jaffna.**

# NEW PALACE

*Dealers in:*

- TELEVISION,
- T. V. SPARE PARTS
- RADIOS,
- RADIO SPARE PARTS,
- CASSETTE RECORDERS,
- WATCHES,
- ELECTRICAL GOODS,
- AND OILMAN GOODS Etc.

**23, Trinco Road, Batticaloa**


பதிப்பாசிரியர்: தம்பிஜயா தேவதாஸ். யாழ். கொமேஷல் பிரின்டேஸ் அன் ட்ரேட்ஸில் தமிழ்ஒலி மன்றத்தின் சார்பில் அச்சிட்டு வெளியிடுபவர் செயலாளர்: எஸ். உமாகாந்தன்.

# தமிழ் ஒலி மன்றம்

## நிர்வாகசபை உறுப்பினர்கள்

தலைவர் : திருமதி. அமிர்தா மஹிந்தா
ஹென்ஸ்மன் வீதி, சாவசகச்சேரி

துணைத்தலைவர்கள் : திரு ஏ. என். யோகநாதன்
திருவள்ளுவர்சாலை, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்

அருட்சகோதரி லில்லி றீட்டா
த. பெ. எண். 65, யாழ்ப்பாணம்

செயலாளர் : திரு எஸ். உமாகாந்தன்
அஞ்சலகம், யாழ்ப்பாணம்

துணைச்செயலாளர் : செல்வி பாமா பொன்னையா
மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்

பொருளாளர் : திரு ஆர். ஜெயராமன்
1ம் ஒழுங்கை, இருபாலை வீதி,
கோண்டாவில்.

துணைப்பொருளாளர் : Dr. பற்றிக் அந்தோனிப்பிள்ளை
கண்டி வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

பதிப்பாசிரியர் : திரு தம்பிஐயா தேவதாஸ்
புங்குடுதீவு—10

## செயற்குழு உறுப்பினர்கள்

1. திருமதி இல்லைராணி மகேஸ்வரன் புங்குடுதீவு
2. திரு பி. லோகேந்திரன் மீசாலை வடக்கு, கொடிகாமம்
3. திரு வி. சிவசந்திரதேவன் மக்கள் வங்கி, பருத்தித்துறை
4. திரு எஸ். கிருபாகரன் கட்டுவன் தெற்கு, தெல்லிப்பளை
5. செல்வி சீதா பொன்னையா மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்
6. திரு எஸ். ரன்ஜன் அல்வாய் வடக்கு, அல்வாய்
7. திரு ஏ. சிறீசற்பவானந்தன் அராலி வடக்கு, வட்டுக்கோட்டை

மன்ற உறுப்பினராகச் சேர விரும்புவோர் செயலாளருடன் அல்லது தமக்கு அண்மையிலுள்ள மேற்படி உறுப்பினர் ஒருவருடன் தொடர்பு கொள்ளவும்.

தமிழ் ஒலி மன்ற வெளியீடு

அன்பான வாசகரே !

'தமிழ் ஒலி' மூன்று மாதத்திற்கொரு தடவை உங்களை நாடி வரும். உங்கள் அடுத்த பிரதியை உறுதி செய்து கொள்ள கீழுள்ள படிவத்தை நிரப்பி ரூ. 3/50 க்கான அஞ்சற் கட்டளையுடன் மன்ற செயலாளருக்கு அனுப்பி வையுங்கள்.

82-ம் ஆண்டிற்கான அடுத்த மூன்று இதழ்களையும் பெற விரும்புவோர் ரூ. 10/- அனுப்பலாம். படிவத்தை அனுப்புபவர்கள் விரும்பினுல், பெயர் முகவரி பேனு நண்பர் பகுதியில் வெளியிடப்படும்.

பெயர் :..............................................

முழு முகவரி :..............................................

..............................................

அஞ்சற் கட்டளை இலக்கம்:-..............................................

" பெற்ற அலுவலகம்:-..............................................

..............................................

கையொப்பம்.

★ பேனு நண்பர் பகுதியில் வெளியிடவும் / வெளியிட வேண்டாம்.

# சிவசக்தி புத்தகசாலை

புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், எவர்சில்வர் பாத்திரங்கள்

விற்பனையாளர்

அங்கீகரிக்கப்பட்ட, கடதாசிவகைகள் விநியோகஸ்தர்

தொலைபேசி—065—2506
—2505

23, பிரதான வீதி, — மட்டக்களப்பு

---

**With the best compliments of**

# E. V. KARTHIGESU

**PASSARA.**

☎ *245* T'grams: *EVYKAY*

Agents For :

**M/S LEVER BROS. (Cey.) Ltd.**
**UNION CARBIDE CEYLON Ltd.**
**CEYLON PETROLEUM CORPORATION.**

பாவனையாளர்களே! வியாபாரிகளே!!

குறைந்த செலவுடன் நீண்டநாட் பாவனைக்கு சிறந்தது

ஜெட் பிராண்ட் அலுமினியப் பாத்திரங்களே

வீட்டுப் பாவனைக்கேற்ற சகலவிதமான அலுமினியப் பாத்திரங்களை

மொத்தமாகவும், சில்லறையாகவும் தெரிவுசெய்ய

சிறந்த உற்பத்தி நிறுவனம்

# ஜெட் மெட்டல் றேட்ஸ்

# JET METAL TRADES

**MANUFACTURERS OF ALUMINIUM**

**Brass and Stainless Steel Utensils.**

PARTNERS: P. S. MUTHUSAAMY, K. GANESALINGAM

ஆடியபாத வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

Adiyapatha Road,
Kokuvil West,
Kokuvil.

ஜெட் பிராண்ட் அலுமினியப் பாத்திரங்களை
கேட்டு வாங்குங்கள்.